ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2079/78 - 2018 ජූලි මස 13 වැනි සිකුරාදා - 2018.07.13
*2079/78 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2018 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/11/2016/யூஎஎ/341.
பிர. செ. குறிப்பு இல. : கடு/அத்/135/யூஎஎ.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழே விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரெத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி, பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 06.

### அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், கடுவளை.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 477/ஏ - தலங்கமை வடக்கு பி கிராம உத்தியோகத்தர் பிரிவில், கடுவளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தலங்கமை வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2017.11.20 ஆந் திகதிய சீஓ/கேடீடப்ளியூ/ 2017/ 38 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட சுமார் 0.3717 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய தொம்பகஹவத்த எனும் கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு.

**01. துண்டு '1' — தொம்பகஹவத்த — விஸ்தீரணம்: 0.3717 ஹெக்டயார்**

வடக்கு : கடுவளை பிரதேச செயலகம் உரிமை கோரும் தொம்பகஹவத்த, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உரிமை கோரும் தொம்பகஹவத்த மற்றும் எஸ். அன்ட் பீ புரொப்பர்டி டிவலொப்பர்ஸ் கம்பனி உரிமை கோரும் தொம்பகஹவத்த ; கிழக்கு : வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உரிமை கோரும் தொம்பகஹவத்த மற்றும் எஸ். அன்ட் பீ. புரொப்பர்டி டிவலொப்பர்ஸ் கம்பனி உரிமை கோரும் தொம்பகஹவத்த ; தெற்கு : உடவத்த வீதி ; மேற்கு : உடவத்த வீதி மற்றும் கடுவளை பிரதேச செயலகம் உரிமை கோரும் தொம்பகஹவத்த.

07 - 960

1A – G28075 - 22 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.